கொரோனா தகவல்

இல.9

05-2021

Kommunales Integrationszentrum Ennepe-Ruhr-Kreis

# கொரோனா வைரஸ் குறித்த தற்போதைய விதிமுறைகள்

## செல்லுபடியாகும் காலம் 28.05.2021 தொடக்கம் 24.06.2021வரையாக

தயவுசெய்து கவனத்திற் கொள்ளுங்கள்: குறுகிய காலஇடைவெளியில் மாற்றங்கள் வரலாம்!

இந்தத் தகவல்கள் எவ்வித சட்டம் தொடர்பான பதிப்பையும் கொண்டிருக்கவில்லை.

## நோட்றைன் வெஸ்ற்பாலெனில் கொரோனா-பாதுகாப்பு ஒழுங்குமுறைகள்

கொரோனா-பாதுகாப்பு ஒழுங்குமுறைகளின்படி தற்போதைய விதிகள் குறித்த கண்ணோட்டம்

## அடிப்படைத் தகவல்கள்

**AHA + L + A**-விதியுடன் தன்னைப் பாதுகாத்தல்

கொரோனா-சந்தேகம் மற்றும் பரிசோதிக்கும் சந்தர்ப்பங்கள்.

EN-பிரதேசத்தில் உதவி/தகவல் வசதிகள்

வீட்டில் தனிமைப்படுத்தல்

நான் ஒரு ஆபத்துள்ள வெளிநாட்டுப் பிரதேசத்திற்குச் சென்றிருந்தேன், இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?

கொரோனா-பாதுகாப்புத் தடுப்பூசி: எவருக்கு ஒரு தவணை யாருக்குக் கிடைக்கும் மற்றும் தடுப்பூசி போடுவது எவ்வாறு இடம்பெறும்?

## உத்தியோகபூர்வ நிலையங்கள் வழங்கும் மேலதிக தகவல்கள்

- Ennepe-Ruhr- பிரதேசத்தின் கொரொனா-தகவல்கள்
  www.enkreis.de
- NRW-கொரோனா குறித்த விசேட பக்கங்கள்
  www.land.nrw
- NRW-சுகாதார அமைச்சு
  www.mags.nrw
- ஒத்துழைத்து முன்னேற்றும் பணிப்பாளர் (கொரோனா குறித்த தகவல்கள் பல மொழிகளிலும்)
  www.integrationsbeauftragte.de
- மத்திய அரசு
  www.bundesregierung.de
- மத்திய சுகாதார அமைச்சு (BMG)
  www.bundesgesundheitsministerium.de
- சுகாதார அறிவுறுத்தலுக்கான மத்திய நடுநிலையம் (BZgA)
  www.infektionsschutz.de
- Robert-Koch-Institut (RKI)
  www.rki.de

# கொரொனா-பாதுகாப்பு ஒழுங்குமுறைகளின்படி தற்போதைய விதிகள் குறித்த கண்ணோட்டம்

கூட்டுச்சேர்ந்த நகரங்களில் அல்லது தனி நகரங்களில் தொற்றின் சராசரி அளவு 100க்கு உள்ளாக நிலையாக இருப்பின், - வெள்ளிக்கிழமை, 28. வைகாசி 2021 தொடக்கம் அமுலுக்குவரும் - நோட்றைன் வெஸ்ற்பாலென் மாநில கொரொனா-பாதுகாப்பு ஒழுங்குமுறையின்படி- 3 படிமுறைத் திட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும்.

ஒவ்வொரு கூட்டுச்சேர்ந்த நகரங்களில் அல்லது தனி நகரங்களில் அமுலிலுள்ள தொற்றின் சராசரிப் படிமுறை தற்போதைய அளவுகளை நீங்கள் இங்கு காணலாம்: நோட்றைன்-வெஸ்ற்பாலென் மாநில தொழில், சுகாதாரம் மற்றும் சமூக அமைச்சின் இணையத்தளம் (MAGS).

பின்வரும் கண்ணோட்டப் பட்டியல் MAGS இன் கீழ்வரும் விசேட இணையப் பக்கத்திலிருந்து எடுக்கப்பட்டது:

https://www.mags.nrw/coronavirus-regeln-nrw

| | **படிமுறை 3**<br><br>7-நாட்கள்-சராசரி அளவு 50,1 தொடக்கம் 100 க்கு இடையாக நிலைத்து இருந்தால் | **படிமுறை 2**<br><br>7-நாட்கள்-சராசரி அளவு 50 தொடக்கம் 35,1 க்கு இடையாக நிலைத்து இருந்தால் | **படிமுறை 1**<br><br>7-நாட்கள்-சராசரி அளவு 35 க்கு கீழாக நிலைத்து இருந்தால் |
|---|---|---|---|
| **தொடர்புக் கட்டுப்பாடுகள்** | பொது இடங்களில் இரு வீட்டைச் சேர்ந்த உறவினர்கள் எண்ணிக்கை அளவின்றி சந்திக்க அனுமதியுண்டு. | பொது இடங்களில் மூன்று வீட்டைச் சேர்ந்த உறவினர்கள் எண்ணிக்கை அளவின்றி சந்திக்க அனுமதியுண்டு.<br><br>இதைவிடவும் பொது இடங்களில் எந்த வீட்டினராக இருந்தாலும் பாதகமான பரிசோதனை முடிவுடன் 10 நபர்கள் சந்திக்க அனுமதியுண்டு. | பொது இடங்களில் ஐந்து வீட்டைச் சேர்ந்த உறவினர்கள் எண்ணிக்கை அளவின்றி சந்திக்க அனுமதியுண்டு.<br><br>இதைவிடவும் பொது இடங்களில் எந்த வீட்டினராக இருந்தாலும் பாதகமான பரிசோதனை முடிவுடன் 100 நபர்கள் சந்திக்க அனுமதியுண்டு. |
| **பாடசாலைக்கு வெளியிலான கற்கைகள்** | வெளியிடங்களில் நேரடிக் கற்பித்தல் எவ்வித நபர்களின் எண்ணிக்கை அல்லது உள்ளடக்கக் கட்டுப்பாடு இல்லாமல் இயலும்.<br><br>உள்ளிடங்களில் நேரடிக் கற்பித்தல் பாதகமான பரிசோதனை முடிவுடன் மட்டும் அனுமதியுண்டு.<br><br>இசை கற்பித்தலில் பாட்டு/ ஊதும் கருவிகளுடன் உள்ளிடங்களில் ஆகக் கூடியது 5 நபர்களுக்கே அனுமதியுண்டு. | பாதகமான பரிசோதனை முடிவுகளுடன் நேரடிக் கற்பித்தலின்போது ஆகக் குறைந்த இடைவெளி இல்லாமல் இயலும், இருப்பினும் ஒரு இடத்தில் நிரந்தரமாக அமர்ந்திருக்கும் ஒழுங்குத் திட்டம் இருக்க வேண்டும்.<br><br>இசை கற்பித்தலில் பாட்டு/ ஊதும் கருவிகளுடன் உள்ளிடங்களில் 10 நபர்கள் வரை பாதகமான பரிசோதனை முடிவுகளுடன் அனுமதியுண்டு. | பாடசாலைக்கு வெளியிலான கற்கை வசதிகளுக்கு போதுமான காற்றோற்றத்துடன் முகக்கவசம் அணியாமல் ஒரு நிரந்தர இருக்கையுடன் இயலும்.<br><br>மாநில சராசரித் தொற்றின் அளவும் 35க்கு கீழாக இருந்தால், உள்ளிடங்களில் நேரடிக் கற்பித்தல் முகக்கவசம் அணியாமல் அனுமதிக்கப்படும். |
| **பிள்ளைகள் -/ இளையோர் செயற்பாடுகள்** | குழு செயற்பாடுகள் உள்ளிடங்களில் 10 மற்றும் வெளியிடங்களில் 20 இளையோருக்கு வயதுவித்தியாசமின்றி மற்றும் பாதகமான பரிசோதனை முடிவுடன் அனுமதியுண்டு.<br><br>விடுமுறை வாய்ப்புகள் மற்றும் விடுமுறைப் பயணங்கள் பாதகமான பரிசோதனை முடிவுடன் இயலும். | குழு செயற்பாடுகள் உள்ளிடங்களில் 20 மற்றும் வெளியிடங்களில் 30 இளையோருக்கு வயதுவித்தியாசமின்றி மற்றும் பாதகமான பரிசோதனை முடிவுடன் அனுமதியுண்டு.<br><br>குழு வாய்ப்புகள் உள்ளிடங்களிலும் முகக்கவசம் அணியாமல் இயலும். | குழு செயற்பாடுகள் உள்ளிடங்களில் 30 மற்றும் வெளியிடங்களில் 50 மனிதர்களுக்கு வயதுவித்தியாசமின்றி மற்றும் பரிசோதனை இல்லாது அனுமதியுண்டு. |

» ZURÜCK »

| | | | |
|---|---|---|---|
| **கலை** | வெளியிடங்களில் இடம்பெறும் நிகழ்ச்சிகளில் 500 நபர்கள் வரை பங்கேற்க இயலும், இருப்பினும் ஒரு இருக்கை ஒழுங்கமைப்பு, ஒரு பாதகமான பரிசோதனை அத்துடன் ஒரு சதுரங்கப் பலகை போன்ற மாதிரியில் இருக்கை ஒழுங்குகள் அமைக்கப்பட வேண்டும்.<br><br>பாடல் நிகழ்வுகள், நாடகங்கள், இசைக்கச்சேரிகள், சினிமாக்கள் 250 நபர்களுடன் இயலும், இருப்பினும் ஒரு இருக்கை ஒழுங்கமைப்பு, ஒரு பாதகமான பரிசோதனை அத்துடன் ஒரு சதுரங்கப் பலகை போன்ற மாதிரியில் இருக்கை ஒழுங்குகள் அமைக்கப்பட வேண்டும்.<br><br>தொழில்ரீதியாக இல்லாது வெளியிடங்களில் நபர்களின் எண்ணிக்கை எதுவானாலும் ஒத்திகை நடத்தலாம். உள்ளிடங்களில் 20 நபர்களுடன், ஒரு பாதகமான பரிசோதனை மற்றும் பாடல்கள் /ஊதும் கருவிகள் இல்லாது இயலும். | பாடல் நிகழ்வுகள், நாடகங்கள், இசைக்கச்சேரிகள், சினிமாக்கள் 500 நபர்களுடன் இயலும், இருப்பினும் ஒரு இருக்கை ஒழுங்கமைப்பு, ஒரு பாதகமான பரிசோதனை அத்துடன் ஒரு சதுரங்கப் பலகை போன்ற மாதிரியில் இருக்கை ஒழுங்குகள் அமைக்கப்பட வேண்டும்.<br><br>தொழில்ரீதியாக இல்லாத ஒத்திகை நிகழ்வுகள் உள்ளிடங்களில் பாடல்கள் /ஊதும் கருவிகளுடன் 20 நபர்கள் வரை, ஒரு பாதகமான பரிசோதனையுடன்.<br><br>அருங்காட்சிச்சாலைகள் போன்றவை எவ்வித தவணைகளும் வழங்கப்படாமல் திறக்கலாம். | வெளி மற்றும் உள் இடங்களில் இடம்பெறும் நிகழ்சிகள், நாடகங்கள், இசைக்கச்சேரிகள், சினிமாக்களுக்கு 1.000 நபர்கள் வரை அனுமதிக்கப்படுவர். இருப்பினும் ஒரு இருக்கை ஒழுங்கமைப்பு, ஒரு பாதகமான பரிசோதனை அத்துடன் ஒரு சதுரங்கப் பலகை போன்ற மாதிரியில் இருக்கை ஒழுங்குகள் அமைக்கப்பட வேண்டும்.<br><br>தொழில்ரீதியாக இல்லாத ஒத்திகை நிகழ்வுகள் உள்ளிடங்களில் பாடல்கள் /ஊதும் கருவிகளுடன் 30-50 நபர்கள் வரை, ஒரு பாதகமான பரிசோதனையுடன் நடைபெறலாம்.<br><br>1 புரட்டாதி 2021 தொடக்கம்: இசை விழாக்கள் 1.000 பார்வையாளர்களுடன் நடத்தலாம், ஒரு பாதகமான பரிசோதனை மற்றும் அனுமதி வழங்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் இருத்தல் வேண்டும். |
| விளையாட்டு | தொடர்பு அற்ற வெளிவிளையாட்டுகள் விளையாட்டு மைதானம் மற்றும் அதற்கு வெளியில் 25 நபர்கள் வரை அனுமதிக்கப்படுவர்.<br><br>வெளி நீச்சல் தடாகங்கள் பயிற்சிக்காக (படுத்து ஓய்வெடுக்க அல்ல) பாதகமான பரிசோதனையுடன் வருவதற்காகத் திறக்கலாம்.<br><br>வெளியிடங்களில் பார்வையாளர்கள் 500 நபர்கள் வரை அனுமதிக்கப்படுவர், பாதகமான பரிசோதனை மற்றும் இருக்கை ஒழுங்குகள் அமைக்கப்பட வேண்டும் - விகிதாசார உள்ளடக்க வரம்பு இல்லாமலும். | வெளியில் தொடர்பு விளையாட்டுகளுக்கு 25 நபர்கள் வரை அனுமதிக்கப்படுவர் அத்துடன் தொடர்பற்ற விளையாட்டுகளுக்கு நபர்களின் கட்டுப்பாடு இல்லாமல்.<br><br>உள்ளே தொடர்பற்ற விளையாட்டுகளுக்கு (உடற்பயிற்சி நிலையங்கள் உட்பட) நபர்களின் கட்டுப்பாடு இல்லாமல் இயலும்.<br><br>உள்ளே தொடர்பு விளையாட்டுகள் தொடர்பை அறியக்கூடிய விதத்தில் மற்றும் பாதகமான பரிசோதனையுடன் 12 நபர்கள் வரை அனுமதிக்கப்படுவர்.<br><br>வெளியே 1.000 பார்வையாளர்கள் வரை (ஆகக்கூடியது 33 வீத உள்ளடக்கம்) முன்பே பரிசோதனை செய்யாவிட்டாலும் அனுமதிக்கப்படுவர்.<br><br>உள்ளே 500 பார்வையாளர்கள் இயலும், பாதகமான பரிசோதனை அத்துடன் ஒரு சதுரங்கப் பலகை போன்ற மாதிரியில் இருக்கை ஒழுங்குகள் அமைக்கப்பட வேண்டும் | வெளி மற்றும் உள் இடங்களில் தொடர்பு விளையாட்டுகளுக்கு 100 நபர்கள் வரை அனுமதிக்கப்படுவர், இருப்பினும் பாதகமான பரிசோதனை இருத்தல் வேண்டும்.<br><br>வெளியே 1.000 பார்வையாளர்கள் வரை (ஆகக்கூடியது 33 வீத உள்ளடக்கம்).<br><br>உள்ளே 1.000 பார்வையாளர்கள் வரை (ஆகக்கூடியது 33 வீத உள்ளடக்கம்) அனுமதிக்கப்படுவர், இருப்பினும் பாதகமான பரிசோதனை அத்துடன் ஒரு சதுரங்கப் பலகை போன்ற மாதிரியில் இருக்கை ஒழுங்குகள் அமைக்கப்பட வேண்டும்.<br><br>மாநில சராசரித் தொற்றின் அளவும் 35க்கு கீழாக இருந்தால், உள்ளக விளையாட்டுக்கள் பரிசோதனை செய்யாது இயலும்.<br><br>1 புரட்டாதி 2021 தொடக்கம்: விளையாட்டு விழாக்கள் நபர்களின் எண்ணிக்கைக் கட்டுப்பாடு இன்றி அனுமதிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்துடன் (பாதகமான பரிசோதனையுடன்) அனுமதிக்கப்படும். |

» ZURÜCK »

| | | | |
|---|---|---|---|
| **ஓய்வுநேரம்** | சிறிய வெளியரங்குத்-திடல்கள் அனுமதிக்கப்படும், இருப்பினும் பாதகமான பரிசோதனை காண்பிக்கப்பட வேண்டும். இவைகளில் வேறு பலவற்றுடன் மினிகொல்ப் திடல், உயரம் ஏறும் திடல்கள், உயரக் கயிற்றுத் தோட்டங்களும் அடங்கும்.<br><br>வெளி நீச்சல் தடாகங்கள் விளையாட்டு நிகழ்வுகளுக்காக பாதகமான பரிசோதனையுடன் திறக்கலாம்.<br><br>கப்பலில் விடுமுறைப் பயணங்கள் (வெளியிடங்களில்) பாதகமான பரிசோதனையுடன் அனுமதிக்கப்படும். | அனைத்து நீச்சல் தடாகங்கள், சௌனா போன்றவை மற்றும் உள்ளக விளையாட்டுத் திடல்கள் திறத்தல் பாதகமான பரிசோதனை மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட நபர்களுடன் அனுமதிக்கப்படும்.<br><br>மாநில சராசரித் தொற்றின் அளவும் 50க்கு கீழாக இருந்தால், ஓய்வுப் பூங்காக்கள் மற்றும் பணவிளையாட்டுத் திடல்கள் திறப்பது, பாதகமான பரிசோதனை மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட நபர்களுடன் இயலும்.<br><br>கப்பலில், வண்டிகளில், வரலாற்று புகைவண்டிகளில் மற்றும் இது போன்ற சாதனங்களில் விடுமுறைப் பயணங்கள் செய்வது பாதகமான பரிசோதனையுடன் இயலும். | நீச்சல் தடாகங்கள் முன்பே பரிசோதனை செய்யாதவர்களுக்கும் திறக்க அனுமதிக்கப்படும்.<br><br>பாலியல் நிலையங்கள் போன்றவை பாதகமான பரிசோதனையுடன் திறக்க அனுமதிக்கப்படும்.<br><br>கிளப் மற்றும் டிஸ்கோக்கள் வெளியரங்குகளில் 100 நபர்கள் வரையானவர்களுக்குத் திறக்கப்படும், இருப்பினும் பாதகமான பரிசோதனை இருக்க வேண்டும்.<br><br>1 புரட்டாதி 2021 தொடக்கம்: மாநில சராசரித் தொற்றின் அளவும் 35க்கு கீழாக இருந்தால், கிளப் மற்றும் டிஸ்கோக்கள் உள்ளரங்குகளை நபர்களின் கட்டுப்பாடு இன்றித் திறக்கலாம். இதற்கான நிபந்தனையாக பாதகமான பரிசோதனை மற்றும் அனுமதிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் இருத்தல் வேண்டும். |
| **வியாபார நிலையங்கள், அடிப்படைத் தேவைக்காக இல்லாதவை** | அடிப்படைத் தேவைக்காக இல்லாத வியாபார நிலையங்கள், திறக்கலாம், click & meet மற்றும் முன்பான பரிசோதனை இல்லாமல்.<br><br>நுகர்வோர் எண்ணிக்கை 20 ச.மீ. க்கு ஒரு நபராக மட்டுப்படுத்தப் பட்டிருக்கும். | நுகர்வோர் எண்ணிக்கை 10 ச.மீ. க்கு ஒரு நபராக மட்டுப்படுத்தப் பட்டிருக்கும். | 800 ச.மீ.க்கு மேலான வியாபார நிலையங்களுக்கு வழங்கப்பட்டிருந்த விசேட அனுமதி நீக்கப்படும். |
| **வணிகப் பொருட்காட்சி/சந்தைகள்** | வணிகப் பொருட்காட்சி மற்றும் கண்காட்சிகள் மட்டுப்படுத்தப்பட்ட நபர்கள் மற்றும் சுகாதாரக் கட்டுப்பாடுகளுடன் இயலும். | வருடாந்த- மற்றும் விசேட நிகழ்வுகள் மட்டுப்படுத்தப்பட்ட நபர்களுடன் இயலும்.<br><br>பாதகமான பரிசோதனையுடன் கியெர்மெஸ் காட்சிகள் அனுமதிக்கப்படும். | 1 புரட்டாதி 2021 தொடக்கம்: வருடாந்த- மற்றும் விசேட நிகழ்வுகள் கியெர்மெஸ் காட்சிகளுடன் பாதகமான பரிசோதனை இல்லாது அனுமதிக்கப்படும். |
| **ஒன்றுகூடல்கள் /மாநாடுகள்** | --- | ஒன்றுகூடல்கள் மற்றும் மாநாடுகள் வெளியில் மற்றும் உள்ளாக 500 நபர்கள் வரை பாதகமான பரிசோதனையுடன் பங்கேற்கலாம். | ஒன்றுகூடல்கள் மற்றும் மாநாடுகள் வெளியில் மற்றும் உள்ளாக 1.000 நபர்கள் வரை பாதகமான பரிசோதனையுடன் பங்கேற்கலாம். |
| **தனிப்பட்ட நிகழ்வுகள் (கொண்டாட்டம் இல்லாது)** | --- | தனிப்பட்ட நிகழ்வுகள் வெளியில் 100 விருந்தினர்கள் வரை மற்றும் உள்ளே 50 விருந்தினர்கள் வரை இயலும். இதற்கு நிபந்தனையாக பாதகமான பரிசோதனை வைத்திருக்க வேண்டும். | தனிப்பட்ட நிகழ்வுகள் வெளியில் 250 விருந்தினர்கள் வரை பரிசோதனை இல்லாது இயலும். உள்ளே தனிப்பட்ட நிகழ்வுகளுக்கு 100 விருந்தினர்கள் வரை மற்றும் பாதகமான பரிசோதனையுடன் இயலும். |

» ZURÜCK »

| | | | |
|---|---|---|---|
| **கொண்டாட்டம்** | --- | --- | கொண்டாட்டம் வெளியில் 100 விருந்தினர்கள் வரை மற்றும் உள்ளே 50 விருந்தினர்கள் வரை இடைவெளி இல்லாது இயலும், இருப்பினும் பாதகமான பரிசோதனை இருத்தல் வேண்டும். |
| **பெரியவிழா நிகழ்வுகள்** | --- | --- | 1 புரட்டாதி 2021 தொடக்கம்:<br><br>மக்கள் விழாக்கள், Schützenfeste , நகர விழாக்கள் போன்றவை 1000 வருகையாளர்களுடன் இயலும், இருப்பினும் ஒரு அனுமதிக்கப்பட்ட செயற்திட்டம் இருத்தல் வேண்டும்.<br><br>மாநில சராசரித் தொற்றின் அளவும் 35க்கு கீழாக இருந்தால், இதுவும் வருகையாளர்களின் கட்டுப்பாடு இன்றி நடைபெறும். |
| **உணவகங்கள்** | வெளி உணவகங்கள் திறக்கப்படலாம், பாதகமான பரிசோதனை மற்றும் இருக்கைப் பதிவு இருக்க வேண்டும். சுற்றுவட்டாரத்தில்-உண்ணும் தடை நீக்கப்படும். | வெளி உணவகங்கள் பாதகமான பரிசோதனை இல்லாது அனுமதிக்கப்படும்.<br><br>உள்ளக உணவகங்கள் திறக்கப்படலாம், பாதகமான பரிசோதனை மற்றும் இருக்கைப் பதிவு இருத்தல் வேண்டும்.<br><br>கன்டீன்கள் திறக்கப்படலாம். அதை நடத்துபவர்கள் முன்பே பரிசோதனை செய்யத் தேவையில்லை. | மாநில சராசரித் தொற்றின் அளவும் 35க்கு கீழாக இருந்தால், உள்ளக உணவகங்களுக்கும் முன்பான பரிசோதனை தேவையில்லை. |
| **தங்குபவர்கள்/உல்லாசப் பிரயாணிகள்** | „சொந்தமான" இரவுத் தங்கல்கள் (விடுமுறை இல்லங்கள், தங்கும் கூடாரங்கள், தங்கும் வாகனங்கள்) ஒரு பாதகமான பரிசோதனையுடன் இயலும்.<br><br>உல்லாச விடுதிகள் தங்குபவர்களது மட்டுப்படுத்தல் இன்றி திறக்கலாம். இது காலை உணவுடனான தனிப்பட்ட இரவுத் தங்கல்களுக்கும் பொருந்தும், ஆனால் மேலதிக உள்ளக உணவுகள் இன்றி.<br><br>பேருந்துப் பயணம் முன்பான பரிசோதனையுடன் மற்றும் உள்ளடக்க மட்டுப்படுத்தலுடன் (60 வீதம்) இயலும், அதாவது தற்சமயம் தடுப்பூசி போடாமல் அல்லது தொற்று ஏற்பட்டு சுகமடைந்தவர்களாக, சுவாசிக்கும் பாதுகாப்புக் கவசம் அணிந்தவர்களாக இல்லாவிட்டால். | தனிப்பட்ட விருந்தினர்களுக்கான முழுவதுமான உணவுப் பராமரிப்புக்கு அனுமதியுண்டு. | பேருந்துப் பயணம் எவ்வித மட்டுப்படுத்தல்களும் இன்றி இயலும், அதாவது அனைத்து பயணிகளும் சராசரித் தொற்றின் அளவு 35க்கு கீழான பிரதேசங்களிலிருந்து வந்திருந்தால். |

» ZURÜCK »

# அடிப்படைத் தகவல்: AHA+L+A-விதிமுறை

## நான் எவ்வாறு என்னை மற்றும் பிறரைப் பாதுகாக்கலாம்?

- இதன்படி கொரொனா வைரஸ் கட்டுப்பாடின்றி பரவாமல் இருப்பதற்கு, முக்கியமானது என்னவென்றால், அனைவரும் ஒருசில முக்கிய விதிகளை கவனத்தில் எடுக்கவேண்டும் என்பதாகும். AHA+L+A- விதிமுறையுடன் (A இடைவெளியைக் கடைப்பிடித்தல், H சுகாதாரத்தைக் கவனித்தல், மருத்துவ A நாளாந்த முகக்கவசம் அணிதல், ஒழுங்காகக் L காற்றோட்டம் வரவிடல் மற்றும் கொரொனா-App பாவித்தல்) ஒருவர் தன்னையும் பிறரையும் பாதுகாக்கலாம்.
- அனைத்திலும் மேலாக குறைந்த இடைவெளி இருக்கும்போது வைரஸ் காற்று மற்றும் கதைப்பதன் ஊடாகப் பரவுகின்றது.

## A இடைவெளியைக் கடைப்பிடியுங்கள்!

- வேறு மனிதர்களைப் பாதுகாப்பதற்கு, நீங்கள் ஆகக்குறைந்தது 1,5 மீற்றர் இடைவெளி வைத்திருக்க வேண்டும். இது ஏறத்தாழ மூன்று நடை தூரமாகும்.
- நீங்கள் நலமாக இருப்பதாக உணர்ந்துகொண்டாலும், உங்கள் உடலில் வைரஸ் இருந்து மற்றவர்களுக்குத் தொற்றச்செய்யலாம்.
- இறுகத் தழுவது மற்றும் கைகளைக் குலுக்குவது வேண்டாம்.

## H சுகாதார-நடவடிக்கைகளை கவனிக்கவும்!

- இருமல் மற்றும் தும்மலை நீங்கள் உங்கள் எப்பொழுதும் முழங்கைக்குள் செய்யுங்கள்.
- உங்கள் கைகளை ஒழுங்காக கழுவுங்கள் மற்றும் கிருமி அகற்றும் திரவத்தால் துப்பரவு செய்யுங்கள்.

## A நாளாந்த முகக்கவசம் அல்லது மருத்துவ முகக்கவசம் அணியவும்!

- மருத்துவ முகக்கவசம் (FFP2 அல்லது OP-முகக்கவசம்) சிறப்பான வகையில் உங்களுக்கு மற்றும் பிறருக்குத் தொற்றுவதிலிருந்து முற்பாதுகாப்பு வழங்குகின்றது.
- அனைவரும் தமது சொந்த முகக்கவசங்களை அணியவேண்டும், முகக்கவசங்களை ஒருபோதும் கைமாற்றக்கூடாது.
- மருத்துவ முகக்கவசங்களை நீங்கள் 5. தடவை பாவித்தபின் மாற்றிக்கொள்ளுங்கள். ஒவ்வொரு பாவிப்பிற்கும் இடையில் முகக்கவசத்தை வெதுப்பும் கருவிக்குள் (Backofen) இல் வைத்து கிருமி அகற்ற வேண்டும். மருத்துவ முகக்கவசத்தை கழுவிப் பாவிக்கக்கூடாது!
- உங்களது துணியிலான நாளாந்த முகக்கவசத்தை நீங்கள் ஒவ்வொரு பாவிப்பிற்கும் பின்பும் ஆகக்குறைந்தது 60°C யில் கழுவுங்கள்.
- முகக்கவசங்கள், அணியும்போது ஈரமாகிவிட்டால், எப்பொழுதும் அவற்றை மாற்றிக்கொள்ள வேண்டும்.

## Lüften!

- மூடிய அறைகளைப் பொறுத்தவரை ஒவ்வொரு 20 நிமிடங்களுக்கும் ஒழுங்காக காற்றோட்டமாக்கிக்கொள்ள வேண்டும்.

## App பாவிக்கவும் - Corona-Warn-App!

- நீங்கள் Corona-Warn-App பாவியுங்கள். நீங்கள் தொடர்பு கொண்ட எந்த மனிதருக்காவது வைரஸ் தொற்றியிருந்தால் இந்த App உங்களுக்குத் தகவல் வழங்கும். இதைவிடவும் அதன்பின் நீங்கள் என்ன செய்யவேண்டும் என இந்த App உங்களுக்குக் கூறும்.
- உங்களுக்கு கொரொனா-வைரஸ் சாதகமாக உள்ளதாக பரீட்சிப்புத் தெரிவித்தால், அதை உங்கள் App இல் பதிவுசெய்யுங்கள்.
- இந்த App அடையாளம் காட்டாது இயங்கும், அதாவது, சொந்தத் தரவுகள் எதுவும் இதில் பதிவுசெய்யப்பட்டிருக்காது.

» ZURÜCK »

# அடிப்படைத்தகவல்: கொறொனா-சந்தேகம் மற்றும் பரிசோதனை வசதிகள்

## எனக்கு கொறொனா இருப்பதாக நான் நம்புகிறேன். நான் என்ன செய்ய வேண்டும்?

- உங்களுக்கு கொறொனா வைரஸ் தொற்றியுள்ளதாக நீங்கள் நம்புகின்றீர்கள், ஏனென்றால் உங்களுக்கு அதற்கான அறிகுறிகள் (காய்ச்சல், இருமல், தொண்டை நோவு, தடுமல், சுவாசத்தடை, சுவை இழப்பு, தலையிடி,....) காணப்பட்டால் அல்லது கொறொனா- App இல் ஏற்படக்கூடிய ஒரு தொற்றுக் குறித்து ஒரு அறிவித்தல் தென்பட்டால், சிறப்பாக நேரடியாக உங்கள் குடும்ப வைத்தியரிடம் நேரடியாகப் பரிசோதனை செய்து கொள்ளலாம்.
- இந்தப் பரிசோதனை இலவசமானது. உங்கள் குடும்பவைத்தியரை முன்பாகவே தொலைபேசியில் அழைப்பதுடன் அவரிடம் ஒரு தவணையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

## கொறொனா-விரைவுப்பரிசோதனை என்றால் என்ன?

- தற்போது அதிகளவில் கொறொனா-பரிசோதனை செய்துகொள்ளக்கூடியஇரண்டு முறைகள் உள்ளன:
  - PCR-பரிசோதனை (வைரசை அடையாளப்படுத்துதல்): PCR-பரிசோதனையின்போது மூக்கு மற்றும் அல்லது தொண்டையிலிருந்து ஒரு தொடுகை பெறப்படும். இந்த மாதிரிப்பொருள் ஆய்வுகூடத்தில் மதிப்பீடு செய்யப்படும். இந்தப் பரிசோதனை மிகவும் துல்லியமானது. ஆனால் முடிவு தெரிவதற்கு வழமையாக 1-2 நாட்கள் எடுக்கும்.
  - PoC-பரிசோதனை **(கொறொனா-விரைவுப்பரிசோதனை):** தொடுகை மாதிரிகளிலிருந்து செய்யப்படும் பரிசோதனை, ஒரு பரிசோதனை-உபகரணங்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு ஒரு குறைந்தளவு நிமிடங்களுக்குள் மதிப்பீடு செய்யப்படும். இந்தப் பரிசோதனை குறைந்தளவு துல்லியமாக இருப்பதுடன் இதை ஒரு மருத்துவ சேவையாளர் மேற்கொள்ள வேண்டும், இவர் ஒரு கொறொனா பரிசோதனை செய்யும் உபகரணத்தை வைத்திருப்பதுடன் பரிசோதனை முடிவை வழங்குபவராக இருத்தல் வேண்டும்.
- இலவசமான கொறொனா-விரைவுப் பரிசோதனைகளை, பரிசோதனை நடுநிலையங்கள் மற்றும் மருந்துச்சாலைகளில் செய்துகொள்ளலாம். இதன் முடிவுகளை அந்த இடத்திலேயே அத்தாட்சிப் பத்திரமாக அல்லது இலத்திரனியல் வடிவமாக கிடைக்கும். விரைவுப் பரிசோதனை சாதகமான முடிவைக் காட்டினால் ஒரு PCR-பரிசோதனை மூலம் அதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதுடன் அதுவரை அவர் உடனடியாக தன்னைத் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும். ஒரு பாதககமான PCR-பரிசோதனை மட்டுமே தனிமைப்படுத்தலை முடிவிற்குக் கொண்டுவரும்.
- மாணவ மாணவிகள் கொறொனா-விரைவுப் பரிசோதனைகளை பாடசாலைகளில் மேற்கொள்ள வேண்டும்.
- அனைத்து ஆண் மற்றும் பெண் குடிமக்கள் ஆகக்குறைந்தது வாரத்தில் 1x தடவை இலவசமான விரைவுப் பரிசோதனையை செய்து கொள்ளலாம். இந்தச் சந்தர்ப்பத்தைப் பாவித்துக் கொள்ளுங்கள்!
- Webseite des Ennepe-Ruhr-Kreises இணையத்தளத்தில் தற்போது எந்த இடத்தில் கொறொனா-விரைவுப்பரிசோதனை செய்துகொள்ளலாம் என்பதைக் கண்டுகொள்ளலாம். இந்த இடங்கள் App des EN-Kreises வரைபடத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சாதகமான கொறொனா-பரிசோதனை: நான் இப்போது என்ன செய்ய வேண்டும்?

- உங்களுக்கு கொறொனா-வைரஸ் பரிசோதனை சாதகமாகக் காண்பித்தால், உங்களுக்கு கொறொனா வைரஸ் தொற்றியுள்ளது. சாதகம் என்பதன் அர்த்தம் முடிவு நல்லது என்பதல்ல, மாறாக வைரஸ் அடையாளம் காணப்பட்டுள்ளது.
- நீங்கள் ஒரு சாதகமான கொறொனா-பரிசோதனை முடிவைப் (PCR-பரிசோதனை அல்லது விரைவுப்பரிசோதனை) பெற்றுக்கொண்டால், நீங்கள் உடனடியாக வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் உங்களுடன் வீட்டில் வசிக்கும் அனைத்து நபர்களும் (தனிவீடு அல்லது மாடிவீடுகள் அல்லது தங்குமிடம்) உடனடியாக தனிமைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். உடனடியாக அனைவரும் வீட்டிற்குள் இருக்க வேண்டும்.
- உங்கள் சொந்த பல்கனி, உங்கள் சொந்த முற்றம் அல்லது உங்கள் சொந்தத் தோட்டம் போன்றவைகளை நீங்கள் தொடர்ந்தும் பாவிக்கலாம் - ஆனால் நீங்களும் உங்களுடன் சேர்ந்து ஒரே வீட்டு நிர்வாகத்தில் வாழும் நபர்கள் மட்டுமேயாகும்

» ZURÜCK »

## அடிப்படைத்தகவல்: EN-பிரதேசத்தில் உதவி /தகவல் வசதிகள்

### எங்கு நான் தொலைபேசி ஊடான உதவிகளை/தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்?

- **பொதுமக்கள் தொலைபேசி நகரநிர்வாகம் Schwelm**
  ☏ 02333/4031449, தொடர்புகொள்ள ஒவ்வொரு நாளும் 8:00 தொடக்கம்18:00 மணி வரை

- **பொதுமக்கள் தொலைபேசி Hattingen, Herdecke மற்றும் Witten**

  - Stadt Hattingen: ☏ 02324/204 4700
    திங்கள் தொடக்கம் வியாழன் வரை 8:30 தொடக்கம் 15:30 மணி வரை, வெள்ளி 8:30 தொடக்கம 12:00 மணி வரை

  - Stadt Herdecke: ☏ 02330/611 350
    திங்கள் தொடக்கம் வியாழன் வரை 8:00 தொடக்கம் 16:00 மணி வரை, வெள்ளி 8:00 தொடக்கம் 12:00 மணி வரை

  - Stadt Witten: ☏ 02302/581 7777
    திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன் 8:00 தொடக்கம்16:00 மணி வரை, புதன் மற்றும் வெள்ளி 8:00 தொடக்கம் 14:00 மணி வரை

- **தயார்நிலையிலுள்ள வைத்தியசேவை**
  ☏ 116117

- **NRW சுகாதார அமைச்சின் பொதுமக்கள் தொலைபேசி**
  ☏ 0211/9119 1001, திங்கள் தொடக்கம் வெள்ளி வரை 7:00 தொடக்கம் 20:00 மணி வரை

- **Ennepe-Ruhr-Kreises இன் சமூகஉளவள சேவை**
  (கொறொனா காரணமான உளரீதியான பிரச்சினைகள்)

  - Breckerfeld, Ennepetal, Gevelsberg, Hattingen, Schwelm மற்றும் Sprockhövel:
    ☏ 02336/93 2788

  - Witten, Wetter மற்றும் Herdecke: ☏ 02302/922 264
    திங்கள் தொடக்கம் வெள்ளி வரை 8:00 தொடக்கம் 12:00 மணி வரை அத்துடன் வியாழனிலும் 14:00 தொடக்கம் 16:00 மணி வரை

- **GESINE Frauenberatung.EN (பெண்களுக்கான ஆலோசனை)**
  **(உடல்ரீதியான, உளரீதியான, பணரீதியான மற்றும் பாலியல் ரீதியான வன்முறை மற்றும் பிரச்சினைகளின்போது)**

  - Schwelm: ☏ 02336/475 909 1
    Witten: ☏ 02302/525 96
    Hattingen: ☏ 02324/380 930 50

» ZURÜCK »

# அடிப்படைத் தகவல்: வீட்டில் தனிமைப்படுத்தல்

## வீட்டில் தனிமைப்படுத்தல் எவ்வாறு நடைபெற வேண்டும்?

- உங்களது கொரொனா பரிசோதனை சாதகமாக வந்தால் அல்லது சுகாதாரத் திணைக்களம் உத்தரவிட்டால் நீங்கள் கட்டாயமாக வீட்டில் தனிமைப்படுத்தி இருக்க வேண்டும்.
- வீட்டில் தனிமைப்படுத்தல் என்பது, நீங்கள் கட்டாயம் உடனடியாக வீட்டில் இருப்பதுடன் எவரும் வருகைதரக்கூடாது. நீங்கள் வெளியே செல்லக்கூடாது – நடக்கக்கூடாது, விளையாடும் இடத்தில், பொருட்களை வாங்குவதற்கு செல்லக்கூடாது மற்றும் வாகனத்தைச் செலுத்தக் கூடாது. நீங்கள் உங்களது சொந்த பல்கனியை, உங்கள் முற்றத்தை அல்லது உங்கள் தோட்டத்தைப் பாவிக்கலாம் - ஆனால் நீங்களும் உங்களுடன் சேர்ந்து வாழும் நபர்கள் மட்டுமேயாகும்!
- உங்கள் தொழில் வழங்குனருக்கு, பாடசாலை மற்றும்/அல்லது பாலர் பாடசாலைக்கு அறிவியுங்கள் மற்றும் உங்களோடு தொடர்பு கொண்டிருந்த அனைத்து நபர்களுக்கும் அறிவியுங்கள்.
- உங்கள் பிள்ளை 12 வயதுக்கு குறைவாக இருந்து (1 தொடக்கம் 11 வயதுவரை) தனிமைப்படுத்தப்பட்டிருந்தால், பெற்றோரில் ஒருவர் கட்டாயமாக வீட்டில் இருக்க வேண்டும்.
- நீங்கள் தனிமைப்படுத்தப்பட்டு இருந்தால், சுகாதாரத் திணைக்களத்தை மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது, உங்களால் மின்னஞ்சல் அனுப்ப முடியாவிட்டால், தொலைபேசியில் அழைக்கலாம். நீங்களாகவே தனிமைப்படுத்தலில் இருந்த வெளியேறியதும் சுகாதாரத் திணைக்களத்துடன் மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளலாம்.
- தனிமைப்படுத்தல் காலத்தில் உங்களுக்கு மருந்துகள் தேவைப்பட்டால் அல்லது நிலைமை மோசமாகத் தென்பட்டால் குடும்ப வைத்தியரை தொலைபேசியில் அழையுங்கள். உங்கள் வைத்தியரிடம் நீங்கள் தனிமைப்படுத்தலில் இருப்பதைத் தெரியப்படுத்துங்கள்.
- நீங்கள் நோயுற்றிருப்பதாக உணர்ந்தால் மற்றும் அவசரமாக வைத்திய உதவி தேவைப்பட்டால், தயாராக உள்ள வைத்திய சேவையைத் தொடர்புகொள்ளுங்கள், இதற்கான தொலைபேசி இலக்கம். ☏ 116117. மிக அவசரமான வேளைகளின்போது அவசர அழைப்பு இலக்கமான ☏ 112 ஐ அழையுங்கள். எப்பொழுதும் நீங்கள் வீட்டுத் தனிமைப்படுத்தலில் இருப்பதைத் தெரிவியுங்கள்.

## நான் தனிமைப்படுத்தலில் இருக்கும்போது, எனது வேலைக்கு என்ன நடக்கும்?

- அடிப்படைரீதியாக செல்லுபடியானது: நீங்கள் தனிமைப்படுத்தப்படவேண்டியிருந்தால், நீங்கள் தொடர்ந்தும் உங்கள் தொழில் வழங்குனரிடமிருந்து வருமானத்தை/உங்கள் ஊதியத்தைப் பெற்றுக்கொள்வீர்கள் (ஊதியம் தொடர்ந்து வழங்குதல்), ஆகக்கூடியது 6 கிழமைகளுக்கு (§56 IfSG).
- அத்துடன் நீங்கள் உங்கள் பிள்ளை காரணமாக (12 வயதுக்குக் கீழாக), அது தனிமைப்படுத்தலில் இருப்பதால், நீங்கள் வீட்டில் இருக்கவேண்டியிருந்தால், ஊதியம் தொடர்ந்தும் ஆகக்கூடியது 6 கிழமைகளுக்கு வழங்கப்படும். இது குறித்த மேலதிக தகவல்களை இங்கு காணலாம். (ஊதியம் நிறுத்தப்படும்போதான உரிமை gem. §56 Abs. 1a IfSG)

## எப்போது எனது தனிமைப்படுத்தல் முடிவடையும்?

- உங்களுக்கு கொரொனா-தொற்று அறிகுறிகளான (இருமல், தொண்டைநோவு, காய்ச்சல், தடுமல் அல்லது சுவை இழத்தல், ...) ஆரம்பித்து 10 நாட்களின் பின்னர் வழமையாக தனிமைப்படுத்தல் முடிவடையும். தனிமைப்படுத்தல் முடிவடைய 2 நாட்கள் முன்பாக நீங்கள் சுகமடைந்திருப்பீர்கள்.
- உங்கள் சாதகமான PCR-பரிசோதனையின் பின்னர் வழமையான நோய் அறிகுறிகள் இல்லாவிட்டால், PCR-பரிசோதனையின் பின்னரான 10 நாட்களில் தனிமைப்படுத்தல் முடிவடையும்.
    - **அவதானம்: முதலில் சுகாதாரத் திணைக்களம் அனுமதி வழங்கிய பின்னரே, தனிமைப்படுத்தல் முடிவுபெறும்!** இதன் அர்த்தம், தனிமைப்படுத்தல் காலம் அனைவருக்கும் எப்பொழுதும் ஒரேமாதிரியாக இருக்காது என்பதுடன், சிலருக்கு நீண்ட காலம் எடுக்கலாம்.
- விதிவிலக்குகள்: உங்களுக்கு ஒரு சாதகமான PoC-பரிசோதனை வந்தது. அதன்பின் PCR-பரிசோதனை தொடரும். PCR-பரிசோதனை முடிவு வரும்வரை நீங்கள் கட்டாயமாக தனிமைப்படுத்தலில் இருக்க வேண்டும். PCR-பரிசோதனை பாதகமாக அமைந்தால் மட்டுமே, உங்கள் தனிமைப்படுத்தல் முடிவடையும்.

» ZURÜCK »

# அடிப்படைத்தகவல்: கொரோனா உள்பயணிக்கும் ஒழுங்குமுறை மத்திய அரசின் கொரோனா வைரஸ்-உள்பயணிக்கும் ஒழுங்குமுறை

## நான் வெளிநாடு சென்றிருந்தேன், தற்போது நான் என்ன செய்ய வேண்டும்?

- நோட்றைன்-வெஸ்ற்பாலென் மாநில 9. வைகாசி 2021 கொரோனா உள்பயணிக்கும் ஒழுங்குமுறை நீக்கப்படுகின்றது.
- 13. வைகாசி 2021 தொடக்கம் மத்திய அரசின் புதிய உள்பயணிக்கும் ஒழுங்குமுறை செல்லுபடியாகும். அமுலிலுள்ள இந்த விதிமுறைகள் ஒரு பிரதேசத்தை ஆபத்தான-, உயர்வான சராசரி அளவுள்ள- அல்லது வைரஸ் மாற்றுவிதங்களுள்ள பிரதேசமாக பிரகடனப்படுத்துவதில் தங்கியுள்ளது.
- Robert-Koch-Instituts இன் இணையப் பக்கத்தில் ஒவ்வொரு பிரகடனத்தையும் காணலாம். ஆபத்தான பிரதேசமாகப் பிரகடனப்படுத்துவது மத்திய சுகாதார, வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் உள்துறை, கட்டுமான மற்றும் தாயக அமைச்சுக்களின் ஒன்றுசேர்ந்த ஆய்வின்படியே முடிவுசெய்யப்படுகின்றது.

- ஆபத்துப் பிரதேசம்
  தடுப்பூசி பெற்றவர்கள், தொற்று ஏற்பட்டு நலமடைந்தவர்கள் மற்றும் எதிர்மறையான பரிசோதனை செய்தவர்களுக்கு தனிமைப்படுத்தல் இல்லை

- உயர்வான சராசரி அளவுள்ள பிரதேசங்கள்

  10 நாட்கள் தனிமைப்படுத்தல், இலவச பரிசோதனை செய்துகொள்ளலாம், தடுப்புப் பெற்றுக்கொண்டவர்களுக்கு விதிவிலக்கு வழங்கப்படும்.

- வைரஸ் மாற்றுவிதங்களுள்ள பிரதேசங்கள்

  14 நாட்கள் தனிமைப்படுத்தல் - தடுப்பூசி பெற்றவர்கள் மற்றும் சுகமடைந்தவர்களுக்கும்

- „ஆபத்தற்ற“ பிரதேசங்கள்

  தடுப்பூசி பெறாத பயணிகளுக்கு சோதனை செய்யும் கடமை

» ZURÜCK »

# அடிப்படைத்தகவல்: கொரோனா வைரசுக்கு எதிரான தடுப்பூசி

## எவர் ஒரு தடுப்பூசித் தவணையைப் பெற்றுக்கொள்கிறார் மற்றும் நான் எவ்வாறு ஒரு தவணையைப் பதிவுசெய்யலாம்?

- எவர் தற்போது தடுப்பூசி பெறுவதற்கு உரித்துடையவர் மற்றும் இதன்படி தடுப்பூசித் தவணைக்கு செல்லமுடியும், என்பதை நீங்கள் Ennepe-Ruhr-Kreises இணையத்தளத்தில் காணலாம். முன்னுரிமை வழங்கப்படுதல் 7. ஆனியில் நீக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.
- Ennepe-Ruhr-Kreis க்குப் பொறுப்பான தடுப்பூசி நடுநிலையம் Ennepetal இல் உள்ளது (Impfzentrum Ennepe-Ruhr-Kreis, Kölner Str. 205, 58256 Ennepetal).
- மேலதிகமாக ஒரு நடமாடும் தடுப்பூசிநிலையம் Sporthalle, Milsper Straße 35 in Schwelm. இல் உள்ளது. இங்கு அனைத்து நிலையங்களுக்கும் வாகனத்தின் ஊடாகப் பயணிக்க முடிவதுடன், தடுப்பூசி ஒரு கூடாரத்தினுள் வைத்துப் போடப்படும். அவதானம்: இணையத்தளம் ஊடாக தடுப்பூசிக்குப் பதிவுசெய்யும்போது இந்த இரு இடங்களில் ஒன்றையே தெரிவுசெய்யய வேண்டும்.
- முன்பாகவே தீர்மானித்த பின்பு மட்டுமே தடுப்பூசி போட முடியும்.
- தடுப்பூசி நடுநிலையத்தில் பாவனைக்குள்ள தடுப்பூசி மருந்துகளைப் பொறுத்தே, தடுப்பூசி போடுவது தங்கியிருக்கும்.
- தவணையை இணையவழி ஊடாகவும் மேற்கொள்ளலாம் www.116117.de அல்லது தொலைபேசி ஊடாக ☏ 0800/116 117 02, நாளாந்தம் 8 மற்றும் 22 மணிக்கு இடையாக.
- தவணை வழங்குவதற்குப் பொறுப்பான Westfalen-Lippe வைத்திய சங்கம் (Kassenärztliche Vereinigung Westfalen-Lippe) (KVWL) தவணையைப் பதிவதில் படிப்-படியான-வழிகாட்டலை மேற்கொள்கின்றனர், அதேபோன்று அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் மற்றும் விடைகளுக்கான ஒரு பட்டியலையும் தயாரித்துள்ளனர்: அனைத்துத் தகவல்களையும் இங்கு காணலாம்: www.corona-kvwl.de/impftermin.
- ஒரு முழுமையான தடுப்பூசிப் பாதுகாப்பை வழங்குவதற்காக, முதல் தடுப்பூசி வழங்கும்போது நேரடியாக இரண்டாவது தடுப்பூசி போடப்படும் தவணையும் தீர்மானித்துக்கொள்ளப்படும்.
- தவணை மேற்கொள்வதை அடிப்படைரீதியாக உறவினர்களோ அல்லது நம்பிக்கைக்குரிய நபர்களோ செய்துகொள்ளலாம்.

» ZURÜCK »

## தடுப்பூசி போடுவது எவ்விதமாக நடைபெறும்?

- தடுப்பூசி போடுவதற்கு நீங்கள் உங்கள் அடையாள அட்டை, உங்கள் தவணை உறுதிப்படுத்தல், உங்கள் தடுப்பூசி அட்டை மற்றும் உங்கள் இலத்திரனியல் மருத்துவஅட்டையை (இருக்குமானால்) மற்றும் இருந்தால் இதுகுறித்து அத்தாட்சிபடுத்தக்கூடிய பத்திரத்தையும் எடுத்து வரவும்.
- நீங்கள் கட்டாயமாக ஒரு மருத்துவ முகக்கவசத்தை அணிந்திருக்க வேண்டும்.
- தடுப்பூசி போடுவதற்கு முன்பாக கொரொனா-தடுப்பூசி குறித்து நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். நீங்கள் விரும்பினால் ஒரு ஆண் அல்லது பெண் வைத்தியருடன் ஒரு ஆலோசனைக் கலந்துரையாடலை மேற்கொள்ளலாம்.
- தடுப்பூசி மற்றும் தடுப்பு மருந்து குறித்த தகவல்களை இங்கு பல மொழிகளில் காணலாம்.
- தடுப்பூசி கற்றுக்கொடுக்கப்பட்ட மருத்துவ ஊழியர்களால் நிறைவேற்றப்படும்.
- தடுப்பூசி மருந்து மேற்கையில் ஊசியால் ஏற்றப்படும்.
- தடுப்பூசி போட்ட பின்பு தடுப்பூசி பெற்ற நபர் ஏறத்தாழ 15 தொடக்கம் 30 நிமிடங்கள் வரை தடுப்பூசி நடுநிலையத்தில் மருத்துவ கண்காணிப்பில் இருப்பார். இதன்மூலம் மிக அரிதாக ஏற்படும் ஒவ்வாமை அல்லது சுகவீனம் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியும்.
- இரண்டாவது தடுப்பூசித் தவணையும் அதே இடத்தில் இதுபோன்றே நடைபெறும்.
- இரண்டாவது தடுப்பூசிக்கான தவணை பின்பொரு நாளுக்கு ஒத்திவைக்கப்படலாம், இதன்மூலம் பல மனிதர்களுக்கு விரைவாக முதல் தடுப்பூசியைப் போட முடியும்.

**வெளியீடு**
Ennepe-Ruhr-Kreis
Der Landrat
Hauptstraße 92, 58332 Schwelm
www.en-kreis.de

Ennepe-Ruhr-Kreis

தற்சமயம் நீங்கள் இந்த விசேட தகவல் கடிதத்தைப் பெற்றுக்கொள்ள விரும்பாவிட்டால், பின்வரும் முகவரிக்கு ki-corona@en-kreis.de ஒரு மின்னஞ்சலை அல்லது தொலைபேசி மூலம் எம்மைத் தொடர்பு கொள்ளவும் 02336/4448-172

தொடர்பு:
Kommunales Integrationszentrum des Ennepe-Ruhr-Kreises
Mail: ki-coronainfo@en-kreis.de
Web: http://www.enkreis.de/bildungintegration/kommunales-integrationszentrum.html

Das Kommunale Integrationszentrum wird gefördert durch

Ministerium für Kinder, Familie, Flüchtlinge und Integration des Landes Nordrhein-Westfalen

Ministerium für Schule und Bildung des Landes Nordrhein-Westfalen

» ZURÜCK »